1982 ஏப்ரல் 2]

யென்று நாங்களும் ஏற்றுக் கொள்கிறோம். மத்திய அரசு பரிவோடு இருக்கிறது, கனிவோடுதான் இருக்கிறது, உதவி செய்கிறது, மனுக்களை வேகமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. திருத்தணிக்குக் கூட வந்திருக்கிறது. அதைப் போலவே இன்னும் தேங்கியிருக்கிற பாளையம் சிமென்ட் ஆலைக்கும், மற்ற ஆலைகளுக்கும் விரைந்து மனுக்களைப் பரிந்துரை செய்து எங்களுக்கு உரிமம் தர வேண்டுமென்றுதன் கேட்டுக் கொண்டிருக்கிறோம், வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ. ஏ. எஸ். பயிற்சி நிலையம்.

*வினா எண் 736 திரு. என். பழனிவேல் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் உள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலைய (P.E.T.C.) வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், மாத வாடகை எவ்வளவு கொடுக்கப் படுகிறது?

(இ) அதற்கு சொந்த கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) ரூ. 2000/– (ரூபாய் இரண்டாயிரம்) கொடுக்கப் படுகிறது.

(இ) சென்னையிலுள்ள முன்னோடிப் பயிற்சி நிலையத்திற்கு சொந்தக் கட்டிடம் கட்டிக் கொடுப்பது சம்பந்தமான பொருள் குறித்து ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையம் வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்குவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். மாத வாடகை இரண்டாயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருப்பதை விட புதிதாக ஒரு கட்டிடத்தைக் கொடுப்பதற்கு ஏன் உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதோடு, மத்திய அரசாங்கம் இந்த ஐ. ஏ. எஸ். பயிற்சி நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்கு அல்லது இப்பொழுது கொடுக்கப்படும் வாடகையில் ஏதாவது கொடுத்துக்கொண்டு வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த முன்னோடிப் பயிற்சி நிலையத்தை நானே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். தற்போது இருக்கும் இந்தக் கட்டிடம் மிகவும் பழுதடைந்திருக்கிறது. அதை உணர்ந்து தான் அதை மேற்கொண்டு பழுது பார்க்க தற்போது உடனடியாக இருக்கக்கூடிய குறைகளைக் களைய நடவடிக்கை

களை அரசு எடுத்து வருகிறது. மேலும் புதுக் கட்டிடம் கட்டுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடம நாங்கள் டிசம்பர் மாதம் தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் தகுந்த நிலங்கள் கிடைக்குமானால் அதன்மீது நடவடிக்கை எடுத்துப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முன்னோடிப் பயிற்சி நிலையத்தைப் பொறுத்தவரையில் 50:50 என்ற வகையில் பாதியை மைய அரசு அந்தச் செலவினங்களில் ஏற்றுக் கொள்கிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் இந்த நிலையத்தில் ஐ.ஏ.எஸ். பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதுவரையில் இந்தப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் தேர்ச்சி பெற்று ஐ. ஏ. எஸ். அதிகாரிகளாகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுவரை 41 பேர் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்.க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இரண்டு பேர் தேர்வு பெற்ற இறுதி நேர்முகத் தேர்வுக்குச் செல்ல உள்ளனர்.

பழங்குடி மக்களுக்காக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் திட்டம்.

*வினா எண் 737 திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பழங்குடி சமுதாயத்திற்கு என புதிதாக அதிக அளவில் அரசு பள்ளிகள் துவக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: பழங்குடி மக்களுக்காக 1977–78 ஆம் ஆண்டிலிருந்தே கணிசமான அளவில் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. ஆண்டும், பள்ளிகள் எண்ணிக்கையும் கீழே தரப்பட்டுள்ளன:

ஆண்டு	பள்ளிகள் எண்ணிக்கை.	
1977—78	7	
1978—79	9	
1979—80	10	
1980—81	10	
1981—82	12	புதிதாகத் துவக்கப் பட்டுள்ளன.
ஆக மொத்தம் ..	48	